உ
சிவமயம்



சுழிபுரம் தண்டிகை குலசேகர முதலியார்,
வட்டுக்கோட்டை இராஜவல்லவ முதலியார் ஆகிய
இரு மரபுகளின் வழித்தோன்றலும்
சுழிபுரம் பெரியபரிகாரியாரின் பூட்டனும் ஆன

# டாக்டர் பூலோகசுந்தரம் பத்மநாதன்


அவர்களின் ஞாபகார்த்த

# பத்ம மலர்

2004.08.16

உ

சிவமயம்



சுழிபுரம் தண்டிகை குலசேகர முதலியார்,

வட்டுக்கோட்டை இராஜவல்லவ முதலியார் ஆகிய

இரு மரபுகளின் வழித்தோன்றலும்

சுழிபுரம் பெரியபரிகாரியாரின் பூட்டனும் ஆன

# டாக்டர் பூலோகசுந்தரம் பத்மநாதன்

அவர்களின் ஞாபகார்த்த

# பத்ம மலர்

2004.08.16

உ

சிவமயம்

தோற்றம்

12

07

1932



மறைவு

17

07

2004

# அமரர்
# டாக்டர் பூலோகசுந்தரம் பத்மநாதன்
அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு தாரண அணிதிங்கள் ஆடிதனில்
பூண்டநற் பெருநாளாம் பிரதமையில் - காண்டருசீர்
பத்மநா தனெனும் பண்பாளன் எமைவிட்டுப்
பரமனடி சேர்ந்தனரென் றறி.

# சமர்ப்பணம்







எமது குடும்ப குலதிலகரும் தலைவரும்
நம்வாழ்விற்கு வழிகாட்டிக்
கல்வியூட்டிச் சீராட்டிப் பாராட்டி
நன்னெறிபுகட்டி நாமுயர அல்லும்
பகலும் அரும்பாடுபட்ட
அன்புத் தெய்வத்தின் பாதக்கமலங்கட்கு
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்கள்.

உ

சிவமயம்



# தோத்திரப்பாக்கள்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம் - திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாம்தாம்ஆரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ் மதியும் வாளரவும் திளைக்கும் செந்தீ
எந்தையார் திரு நாமம் நமச்சி வாய
என்றெழுவார் இருவிசும்பில் இருக்கலாமே

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாயே.
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவையட்டித் தரப்பணிய.

## திருவாசகம்

சிந்தனை நின் றனக்காக்கி நாயினன்றன்
கண்ணினை நின்றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணி வார்த்தைக் காக்குமைம் புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்ததனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலியத் தமியனேற்கே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கை கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெல்லவருஞ் சோலைக் குயிலாலே
மெய்யுரு குமானைத் தழுவாயே
தெள்ளு த்மிழ்ப் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மண வாளப் பெருமாளே.

அருவமுருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய்நின்ற சோதிப்பிளம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிருமுகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

அறுகுநுனி பணியனைய சிறியதுளி பெரியதெரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆபி தாதையார் மாய மோகமாய்
அருமையினி வருகையிட மொளுமொளென உடல் வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய்
அவரொடு – பெரியோராய்

அழகுபெறு நடையுடைய கிருதுபடு மொழிபழகி
ஆவியாயவோர் தேவிமாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசையாளராய் ஊசி வாசியாய்
அவியுறுட - சுடர்போல

வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முகிடுயவர்களொடு
சீறி ஞானிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறிமிடமொழிமொரு
வீணி யார்சொலே மேலதாமிட
விதிதனை - நினையாதே

மினுகுமினு கெனுமுடல மனமுருகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுன தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோலென
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசாவாய் ஆளி வாயராய்
மிடையுறு - வருநாளில்

வறுமைகளு முடுகிவர உறுபொருளு நழுவசிவ
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவமிறு வமிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாடிட ஈளை மேலிட
வழவழென உமிழுமது கொழுகொழென ஏழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய்
மனையவள் - மனம்வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயென லாலர் சீயென
கனவுதனி விரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவென வீடுபோவென
வலதழிய விரகழிய உறைகுழறி விழிசொருகி
வாயுருமலிட ஆவிபோகுநாள்
மனிதர்கள் – பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழ
எனதுடைமை யென தடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ குலாவென வாயை ஆவென
இடுகுபறை சிறுபறைகள் திமலையொடு தவிலறைய
ஈழ தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனி – விடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசிடாக்ளோ பாச நாசனே
இருவினைமு மலமுறைமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறும்வகை பரமசுக மதனையரு விடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் – பெருமாளே.

உ

சிவமயம்

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர ஆளுமை யாள்கொழுநற் (கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பாங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
        மெய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
        செம்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
        பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
        ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நாகைவாள் நிலாவெறிப்ப
        வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
        பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
        சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
        ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
        மருந்தனை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
        அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
        போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
        பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாங்கள்பாடிப்
பொன்னுடையப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கந்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்கருப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளக்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## அன்பும் பண்பும் நிறைந்த டாக்டர் பூலோகசுந்தரம் பத்மநாதன் அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

"துஞ்சுமேதி சுறாக்களை ஓட்டச்
சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி
இஞ்சிவேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே'

என்று சின்னத்தம்பிப் புலவரால் போற்றியும் ஏற்றியும் பறாளை விநாயகர் பள்ளில் கூறப்பெற்ற பேருரே சுந்தரஞ்சேர் சுழிபுரம். இப்பெரும்பதியிலே சீருஞ்சிறப்போடும் வாழ்ந்தவர் பெரியபரி காரியார். ஆறுமுகம் எனும் பெயர் கொண்ட பெரியபரிகாரியின் தவப்புதல்வனே பரிகாரியார் தம்பிப்பிள்ளை. தம்பிப்பிள்ளையின் புதல்வனே புகழ்பூத்த **பூலோகசுந்தரம்** (L.I.M சென்னை). டாக்டர் பூலோகசுந்தரம் கொழும்பு அரசினர் ஆயுர்வேதக் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராகச் சேவையாற்றி நற் கீர்த்தி பெற்றார்.

பொன்போன்ற நிறமும், பொலிவான முகமும், எடுப்பான மீசையும், எழிலான தோற்றமும் கொண்ட டாக்டர் பூலோக சுந்தரத்திற்குப் பெண்கொடுக்கப் பலர் அன்று முன்வந்தனர். ஆனால் வளமான வட்டுக்கோட்டை இராஜவல்லல் முதலியார் மரபில் வந்த கமலதாட்சி அம்மாவின் பெற்றோர் முந்திக் கொண் டனர். இல்லற வாழ்வில் இனிதே இணைந்த டாக்டர் பூலோக சுந்தரம் கமலதாட்சி தம்பதிகட்குப் பூலோகபாக்கியமாகப் பிறந்த வரே இவ்வரலாற்றின் நாயகன் திரு. பத்மநாதன் அவர்கள். இவர் 12.07.1932 ம் ஆண்டு பிறந்தார்.

இத்தகு நாயகனான பத்மநாதனோடு ஐந்து சகோதரர் களும், ஒரு சகோதரியும் கூடப்பிறந்தனர். அவர்கள் முறையே மட்டக்களப்பில் நீர்ப்பாசன இலாகாவில் சேவையாற்றியவரான அமரத்துவம் பெற்ற இராமநாதன் அவர்கள், நுவரெலியாவில் வைத்தியராகச் சேவையாற்றியவரான அமரத்துவம் பெற்ற டாக்டர் நாகநாதன் (பீற்றர்) அவர்கள், தரைப்படைத் தொலைத் தொடர்புச் சேவையில் கடமையாற்றிய அமரர் வைத்தியநாதன் அவர்கள், தற்பொழுது வவுனியா செட்டிக்குளத்தில் டாக்டராகச் சேவையாற்றுகின்ற கைலாயநாதன் அவர்கள், பொறளை சித்த ஆயுர்வேத மருத்துவ பீடத்தில் சிரேஷ்ட மருத்துவ விரிவுரை யாளரான மனோரஞ்சிதம் தவத்துரை அவர்கள், அமரத்துவம் பெற்ற திரு. குணரத்தினம் அவர்கள் சகோதரர்கள் ஆவார்.

சிறப்புப் பொருந்திய சகோதரர்களோடு உடன்பிறந்த பத்மநாதன் அவர்கள் ஆரம்பக்கல்வியை வட்டுக்கோட்டை அமெரிக்கமிஷன் பாடசாலையிலும், உயர்கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், கொழும்பு சென் பீற்றஸ் கல்லூரியிலும் கற்க உறுதுணை புரிந்தனர் பெற்றோர். கல்வி கேள்விகளிலே வல்லவ ரான பத்மநாதன் யாவர்க்கும் நல்லவர் ஆனார்.

உத்தியோகம் புருஷலட்ஷணம் என்பார்கள். இதற்கிணங்க பத்மநாதன் அவர்கள் தன் உயர்கல்வியைப் பூர்த்தி செய்த பின் சினிமாஸிஸ் முகாமையாளராகவும், உரிமையாளராகவும் கெக்கிராவை, அனுராதபுரம் பகுதிகளில் சேவையாற்றினார். தொடர்ந்து அனுராதபுரத்திலுள்ள அரசினர் வைத்தியசாலை களுக்கு உணவு விநியோகிக்கும் ஒப்பந்தகாரராக அரும்பெருஞ் சேவை புரிந்தார். தொழில் வளங்கள் பலவற்றை அறிந்த திரு. பத்மநாதன் அவர்கள் தொழில் வளத்தால் உயர்ந்தார். சிறந்தார்.

அழகும் இளமையும் நிறைந்து சேவையாற்றுங் காலத் தில் கண்கவர் வாலிபனாகத் திகழ்ந்தார். இவ்வாறு திகழுங் காலை, தம்மினிய மகனான பத்மநாதன் அவர்கட்கு நாரந்தனை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் மூன்றாவது புதல்வியான பொற்கொடி போன்ற பூமணியை 1956ம் ஆண்டு திருமணம் செய்து கொடுத்தனர் பெற்றோர்.

கல்யாண வாழ்வு கற்கண்டாயினிக்க சந்ததி வளரச் சற் புத்திரரைப் பெற்றனர். பத்மலீலா, கமலேஸ்வரி, இரஞ்சிதமலர், மனோகரன் ஆகிய பிள்ளைகள் இல்லறப் பயனால் இனிதே கிடைத்தனர். தம்பிள்ளைகளைப் பொன்னெனப் பேணி அன் போடணைத்து ஆதரவுகாட்டிக் கல்வியூட்டி அவையத்துள் முத்தியிருக்கும் பிள்ளைகளாக ஆக்கினார் பத்மநாதன் தம்பதி களான பெற்றோர்.

மூத்தமகளான பத்மலீலாவிற்குக் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திரு. கந்தையா ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மக னான திரு. திருஞானசம்பந்தமூர்த்தியைத் திருமணம் செய்வித்து அவர்கள் மூலமாக கிருஷ்ணதாஸ், உஷாந்தினி, பத்மஜெயன் ஆகிய பேரர்களைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

இரண்டாவது மகளான கமலேஸ்வரிக்கு வட்டுக்கோட்டை யைச் சேர்ந்த திரு. துரையப்பா சிவபாக்கியம் தம்பதிகளின் அருமைப் புதல்வனான பிரான்சில் வாழும் திரு. அருந் தவச் செல்வத்தைக் கல்யாணம் செய்வித்து ஐங்கரன், அருள்ராஜ், சுதன் ஆகிய பேரரைக் காணும் பேற்றினைப் பெற்றுப் பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

மூன்றாவது புதல்வியான இரஞ்சிதமலரை நாரந்தனை சரவணையைச் சேர்ந்த கைலாசபிள்ளை பரமேஸ்வரி தம்பதி களின் புதல்வனும் தற்பொழுது பிரான்ஸ் நாட்டில் வாழ்பவ ருமாகிய திரு. பூ. சுகிர்தராஜா அவர்கட்கு வதுவை செய் வித்து ஆனந்தக்கடலில் மிதந்தனர்.

ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று சொல்லத் தக்க தம் ஏக புத்திரனான யாழ்ப்பாண தேசிய நீர் வழங்கல்

வடிகால் அமைப்பு சபையில் சேவையாற்றும் திரு. மனோகரனை பன்னாலையைச் சேர்ந்த திரு. இரத்தினம் திரிபுரியம்மா தம்பதிகளின் புதல்வி யசோதினியைத் திருமணம் செய்வித்து இனிய பேரர்களாக இளவதனன், கஜவதனன் ஆகிய பேரர்களைக்கண்டு இறும்பூது எய்தினர்.

இவ்வாறு இனிய மனைவியோடும், மக்களோடும், மருமக்களோடும், பேரர்களோடும் அளவளாவிக் குதூகலித்து வாழ்ந்ததோடு உற்றார் உறவினரோடும் நன்கு பழகிப் பண்புடைய மனிதனாகத் திகழுங்காலை கூற்றுவன் இதனைக் கண்டு பொறாமைப்பட்டு பத்மநாதன் அவர்களது இன்னுயிரை 17.07.2004 அன்று பறித்தெடுத்து மூத்தண்ணனாகிய முதல்வன் விநாயகனின் திருப்பாதங்களில் சேர்த்தான்.

திரு. பத்மநாதன் அவர்களின் பிரிவைத் தாங்கொண்ணாத மனைவி தலைமேல் கையடித்துத் தரணியில் புரண்டு ஓவெனக் கதறி அழுதார். மக்கள் எம் தந்தையை எப்பிறப்பில் இனிக் காண்போமென ஏங்கியழுதனர். மருமக்கள் மனக்கிலேசமுற்று உடல்சோர்ந்து உருகியழுதனர். பேரர்கள் கண்ணீரால் கதை சொல்லிப் பேதலித்து அழுதனர். உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், அயலவர் யாவரும் அன்பனே! பத்மநாதா! கடுகதியாய் நீயும் கைலை சேர்ந்தனையோ! உன் அன்பு வார்த்தையும் அழகொழுகும் சிரிப்பும் கேட்போமா? பார்ப்போமா? என்று விம்மியழுதனர். யார் அழுதும் என்ன பயன்? படைத்தவனே அழைத்துவிட்டான்! படியளந்தவனே சேர்த்துக் கொண்டான்! ஆதலால் அமைதி பெறுவோம்! ஆறுதல் அடைவோம்!

அமரர் திரு. பத்மநாதன் அவர்கள் அடக்கமானவர். எளிமையானவர். அன்பு நேயம் கொண்டவர். ஆதரிக்கும் மனப்பாங்கு பெற்றவர். உற்றார் உறவினரோடு தன் இறுதிக் காலத்தில் நன்கு பழகியவர் கெக்கிராவை, அனுராதபுர மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியவர். அத்துடன் தனது இனசனங்களின் எல்லா வைபவங்களுக்குச் சமூகம் கொடுத்து முன்னின்று நடாத்திப் பேருவகை கொண்டவர்.

சுழிபுரம் பறாளை ஈசுரவிநாயகன் ஆலயத்தின் தர்மகர்த் தாக்களில் ஒருவராகத் திகழ்ந்ததோடு அவ்விநாயகன் மேல் அளவிலாப் பக்தி பூண்டவர். ஆதலால் விநாயபக்தனை, அவ் விநாயகனே அழைக்க விரும்பியே சென்றனர், அன்பர் பத்ம நாதன் என்று, யாவரும் உன்னுவோம். அந்த விநாயகன் திருவடியை அன்னாரின் ஆத்மா சென்று சாந்திபெற யாவரும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

# பன்னாலை வரத்தலம்
# கற்பக விநாயகர் தேவஸ்தான
# ஆதீனகர்த்தா ம.மகேந்திரசர்மாவின்
# பிரார்த்தனை உரை

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பூலோக சுந்தரம் பத்மநாதன் எனில் அனைவருக்கும் அவர் யார் என்பதை அவரது சமூக நலசேவை, சமயத் தொண்டுகளின் ஈடுபாடு, விளை பொருள் உற்பத்தி சார்பின் தேர்ச்சி என்பவற்றால் அறியமுடியும். தமது பிள்ளைகளைக்கூட அத்துறைகளில் ஈடுபடுத்தி அதன் மூலம் கிராம வளர்ச்சியின் சிறப்பிற்கு உதவியவர் பூலோகசுந்தரம் பத்ம நாதன்.

இந்த வலைப் பின்னலில்தான் வளர்ந்து நற்சேவைகளின் மூலம் உற்றார், உறவினர், நண்பர்கள், கிராம மக்கள் ஆகியோரது பாராட்டுகளைப் பெற்றவர். வரத்தலம் கற்பக விநாயகப் பெருமானின் நித்திய, நைமித்திய பூசைகளில் பங்குபற்றி பெரும் தொண்டாற்றிய புண்ணிய சீலர்.

தான் தேர்ந்த வழியினின்று ஆற்றிய தர்மங்கள் கூட புனிதமாகவே காணப்பட்டது. சிறந்த உழைப்பாளி. இறைபக்தியை உடைமையாக வரித்தவர். கற்றதை அதன் வழியினின்று செயற் படுத்தியவர்.

விதியை யாராலும் வெல்ல முடியாது. இவர் இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்ந்து விட்டார். அழைப்பு வந்தால் எவரும் போகத் தான் வேண்டும். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எனது பிரார்த்தனை என்றுமிருக்கும்.

ம. மகேந்திரசர்மா,
ஆதீனகர்த்தா,
வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

உ
சிவமயம்

# நல்லவர் வல்லவர் அன்பர்
# அமரர் பத்மநாதன்

வயலும் வயல்சார்ந்த மருதநிலமாகிய சுந்தரஞ்சேர் சுழிபுரத்தில் பறாளையுறை விநாயகன் முருகன் அருள்பெற்று மருத்துவத்துறையிலே சிறப்பாகச் சித்தமருத்துவத்தில் பேரும்புகழும் பெற்று வாழ்ந்தவர் பெரியபரிகாரியார். இத்தகு சீருஞ்சிறப்பும் பெற்றவரின் வழித்தோன்றலே டாக்டர் பூலோகசுந்தரத்தின் பெறாமகன் திருமகன் பத்மநாதன் அவர்கள். பிறந்தவிடம் சுழிபுரம். புகுந்தவிடம் இராசவல்லவ முதலியார் தோன்றிய வட்டுக்கோட்டை.

கவிஞராலும் கற்றோராலும் ஏற்றிப் போற்றப்படும் வட்டுக்கோட்டையில் தன் வாழ்வை யமர்த்தி இல்லறமெனும் நல்லறத்தில் இனிதே வாழ்ந்து இனிய புதல்வர்களைப் பெற்றுப் பாரில் பாங்குற வாழ்ந்தவர் அன்பர் பத்மநாதன் அவர்கள்.

உலகில் ஒவ்வோர் மனிதனும் செய்யும் தொழிலைத் தெய்வமாகப் போற்ற வேண்டும். அத்தொழிலில் காட்டும் நாட்டமும் செயலூக்கமும் அத்தொழிலால் அவனை உயர்ச்சிபெற வைக்கும். இந்தவகையிலே அன்பர் பத்மநாதன் அவர்கள் கெக்கிராவை, அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் சினிமாவிஸ் முகாமையாளராகவிருந்து பேரும் புகழும் பெற்றார். பின் "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" எனும் கூற்றுக்கு இணங்க, அனுராதபுர மாவட்ட வைத்தியசாலைகளில் உணவு விநியோக ஒப்பந்தக்காரராகச் சேவையாற்றி வைத்திய அதிகாரிகள் தொட்டு நோயுற்ற மக்கள்வரை அவர்களின் இனிய இதயங்களில் இடம்பிடித்தார்.

இவ்வாறு தன்தொழில் சமூகம் உறவுகள் யாவற்றோடும் தொடர்புடைய மனிதநேயச் செம்மல் இன்றில்லையே எனும்போது

யாவர்க்கும் கவலை பெருகிறது. கண்ணீர் வருகிறது. தன்சொந்த ஊரில் உற்றார் உறவினர்களோடு உறவாடி உளம்பூரிக்கும் வேளையில் காலன் இன்னுயிரைக் கவர விதி விளையாடிவிட்டது. அன்பர் பத்மநாதனின் அரிய குணங்கள், பண்புகளை மனதில் உன்னி அவரின் எதிர்காலச் சந்ததியினர் பின்பற்றி வாழவேண்டும். பறாளை ஈசுரவிநாயகன் தன்பக்தரின் குடும்பத்தை என்றும் நன்றும் காப்பாற்றுவாராக. அன்னாரின் புனித ஆத்மா சாந்திபெற என்குல தெய்வமாகிய சுழிபுரம் பறாளையுறைப் பன்னிருகரத்தனைச் சித்திக்கின்றேன். வந்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"வாரியார் குடிமனை'
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
01.08.2004.

திருமுருக கிருபானந்த வாரியார்
சுவாமிகளின் பிரதம சிஷ்யன்
பிரசங்கபூஷணம், கலாபூஷணம்
சிவகலாபூஷணம், கலாஞானவாருதி
சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A. Dip In Edu.
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்.)

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

ஈசுர விநாயகரின் அருளோடு வாழ்ந்த பண்பாளன்

# அமரர்

# பூலோகசுந்தரம் பத்மநாதன்

## அவர்கள்.

பழைமையும் செழுமையும் கொண்டு சைவமும் தமிழும் தளைத்தோங்கும் பதி சுழிபுரம் பறாளாய். பள்ளுப்பாடல் புகழ் விநாயகப் பெருமானதும், முருகப்பெருமானதும் அருளாட்சியிலே பாரதப் பண்போடு வாழ்ந்த குடும்பம் "பெரியபரியாரிபார்" குடும்பம். இப்புகழ்பூத்த குடும்பத்திலே ஈசுர விநாயகரின் அருளோடு வாழ்ந்த பண்பாளன் அமரர் பூலோகசுந்தரம் பத்மநாதன் அவர்கள்.

அமரர் அவர்கள் எமது தேவஸ்தானத்தின் முகாமையாளரும் சகோதரருமாகிய டாக்டர் கைலாயநாதன் அவர்களுடன் கடந்த வருடம் ஈசுர விநாயகரின் மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தவர். இவர் ஒரு மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கும் பண்புள்ளம் கொண்டவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நற்பண்புகள் இவரிடம் காணலாம். இவருடைய சேவை பிற மாவட்டத்திலே இருந்தமையால் சுழிபுரத்தின் தொடர்புகள் குறைவாகவே காணப்பட்டது. மேலும் அமரர் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டமையே இதற்குக் காரணமாக அமைந்தது. எது எப்படி இருப்பினும் இவர் இறக்கும் வரை ஈசுர விநாயகரின் மேல் மிக்க பக்திகொண்டவராகவே வாழ்ந்தார். இவர் மிக்க இறைபக்தி, குருபக்தி உடையவராகக் காணப்பட்டார். இவரது பிரிவால் நாம் கவலை அடைகின்றோம்.

'"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்பதற்கமைய இவரது பிள்ளைகள் நல்ல நிலையில் இருப்பதை நாம் அறிவோம்.இவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்,

சகோதரர்கள், நண்பர்கள் உறவினர்கள் அனைவர்க்கும் ஈசுர விநாயகர் ஆறுதல் அளிப்பாராக. இவரது ஆத்மா சாந்தியடைய சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாகரின் திருப்பாதங்களை வணங்குகின்றேன். சாந்தியடைவதாக!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஈசுர விநாயகர் தேவஸ்தானம்,*
*பறாளாய்,*
*சுழிபுரம்.*
*06. 08. 2004.*

*சோழியூரான் –பிறைசூடிக்குரு*
*(சந்ததிப்பூசகரும் – ஓய்வுபெற்ற ஆசிரியரும்)*

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

# தாத்தா எங்கே?

நாளும் முகம்பாத்து பல கதைகள் கேட்டிடவே
நாமிருக்க மாயமாய் மறைந்தது ஏனோ?
பேரர்கள் என்றே தயவாக அழைத்து
அரவணைத்த தாத்தாவே ஆறுமா எம்மனம்!
சிறியவர்கள் நாங்கள் வண்ணமுகம் காணாது தவிக்கின்றோம்.
சிறிது காலம் வாழ்வில் சிந்திக்காது சென்றதேன்?
உங்கள் மூத்தபேரன் அமைதி பண்பு அறிவுடைய
பிள்ளை எனக் கூறுவீர்களே தாத்தா!
பிரபல்யமான பாடசாலையில் சேர்க்க வேண்டுமெனக் கூறுவீர்களே.
என் முன்னேற்றம் கண்டு மகிழ நீங்கள் இன்று இல்லை
என நினைக்க என் மனம் பொறுக்குதில்லையே தாத்தா!
சுற்றுலா கூட்டிச்சென்று பல இடங்கள்
காட்டுவீர்கள் என நாமிருந்தோம்
எங்கள் படிப்பிற்கு பற்பல புத்திமதிகள் கூறுவீர்களே தாத்தா!
இன்று நீர் இன்றி துடிக்கும் மீன்போல
உங்கள் வதன முகம் காணாது தவிக்கின்றோம்.

*தி. கிருஷ்ணதாஸ்,*

*தி. உஷா நந்தினி,*

*தி. பத்மஜெயன்.*

# பிரான்ஸ் வாழ் பேரர்கள்

பிரான்சில் இருந்து ஓடோடி வந்தோம் உமைக்கான
பற்பல கதைகள் கூறினீர்களே தாத்தா!
அன்பு மழையால் எமை நனைத்த
அன்பின் உறைவிடமே தாத்தாவே!
எனி உங்கு வந்தால் யாரை இனித்
தாத்தா என்று அழைப்போம்!
எமைத் தேற்றுவார் இன்றி தவியாய்த் தவிக்கின்றோம்!
எனினும் தாத்தா வட்டுக்கோட்டையில்
இருக்கிறார் என்று அமைதி கொள்வோம்!

*அ. ஐங்கரன்,*
*அ. அருள்ராஜ்,*
***அ. சுதன்.***

# அப்பப்பா எங்கே?

அண்ணா, குட்டி என்றே அன்புடனே அழைத்து
பாச மழை பொழிந்திடும் எம் அருமை அப்பப்பாவே!
முத்த மழையால் எமை நனைத்து முகமலர்ச்சி கண்டிடுவீர்!
எம் மழலை மொழி கேட்டு நீரும் மகிழ்ந்திடுவீர்!
உம் சொல்லு தனை நாளும் அன்புடனே எடுத்துத் தந்து
இன் மொழிகள் பற்பலவும் கேட்டிடுவோம்!
கல்வியில் சான்றோனாய் வரவேண்டும் என்று நீரும்
புத்திமதிகள் கூறிடுவீர்களே அப்பப்பா!
உங்கள் வாக்கை வேதவாக்காய் ஏற்றிடுவோம்!
எனினும் எம்மனம் மகிழ நீங்கள் இங்கு இல்லையே!
எனியாரை அப்பப்பா என்றழைப்போம்!
காவடியில் அப்புச்சாமியிடமா சென்றீர்! நீங்கள்
மீண்டும் வருவர்கள் என அமைதிகொள்கின்றோம்.


*ம.. இளவதனன்,*

*ம. கஜவதனன்.*

# நன்றி நவிலல்

எமது குடும்ப குலதிலகரும் குடும்பத்தலைவரும்
எம்வாழ்விற்கு வித்திட்டு வழிகாட்டி எமை
வளப்படுத்தி உருவாக்கிய
**அமரர். பூலோகசுந்தரம் பத்மநாதன்** அவர்களின்
இறுதிக்கிரியையில் நேரில் வருகைதந்து பங்குபற்றி
அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்கட்கும்,
தந்தி, கடிதம், தொலைபேசி, தொலைநகல்வு
ஆகியவற்றின் மூலம் அனுதாபங்களை அறியத்தந்ததோர்க்கும்,
மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்த
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
வட பிராந்திய நலன்புரிச் சங்கத்தினருக்கும்,
இரங்கற் செய்தி, இரங்கலுரை ஆற்றிய
உயர்ந்த உள்ளங்கட்கும்,
வீட்டுக் கிருத்தியக் கிரியைகளைச் செய்த குருமாருக்கும்,
அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிலும்,
ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, மதியபோசனத்திலும்
கலந்துகொண்ட அனைவருக்கும்.
இம்மலரைக் குறுகிய காலத்தில் யாவரது
கைகளிலும் மலர ஆலோசனை நல்கிய
பிரசங்கபூஷணம், கலாபூஷணம், சிவகலாபூஷணம்
சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A.Dip. In. Edu
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்) அவர்கட்கும்

*வட்டுக்கோட்டை..*
*16. 08. 2004*



*மனைவி, மக்கள்,*
*மருமக்கள், பேரர்கள்.*

தண்டிகை சத்துருகுலசேகர முதலியார் (சுழிபுரம்)
+
இராசவல்லவமுதலியார் (வட்டுக்கோட்டை)
மரபுவழி வந்த
பெரியபரிகாரியார் (ஆறுமுகம்)

வைரமுத்து (மூத்தப்பு) + தங்கமுத்து *
↓
செல்லத்துரை (பெரியபூலோகம்) *
சுப்பிரமணியம் (பெரியதம்பி) *
தனிப்புரிசிங்கமுதலியார் *
பெரியதங்கச்சி *
சின்னத்தங்கச்சி *

தம்பிப்பிள்ளை + தங்கமுத்து *
↓
குலசேகரம்பிள்ளை *
பூலோகசுந்தரம் *
அப்புத்துரை *
வள்ளிநாயகி *
கந்தசாமி (இராசா) *

* டாக்கடர் பூலோகசுந்தரம் (L.I.M. Madras)
(முன்னாள் கொழும்பு அரசினர் ஆயுர்வேதக்கல்லூரி விரிவுரையாளர்)
* கமலாதாச்சிஅம்மா - தெய்வானைப்பிள்ளை *

இராமநாதன் *

**பத்மநாதன்**

Dr. நாகநாதன் *
சின்னம்மா *
- பூலோகரஞ்சினி
  +
  சேகர்
- கமலரஞ்சினி
  +
  தியாகராஜா
- பூங்கமலம்
  +
  கணேஷ்
- தபேந்திரநாதன்
  +
  பங்கஜம்
- ராகுலநாதன்
- குலராணி
  +
  மிரண்டோ
- சேகரமுதலியார்

வைத்தியநாதன் *
+
தனலட்சுமி
- பூலோகறஞ்சினி
  +
  சோதிலிங்கம்
- மனோறஞ்சன்
  +
  செல்வராணி
- தனநாதன்

Dr.கையிலாயநாதன்
+
கனகாம்பிகை
↓
பிரியதர்ஷினி
சுகந்தி
பூலோகசுந்தரம்
நிரஞ்சன்

(பத்மநாதன் →)

பத்மலீலா
+
திருஞானசம்பந்தமூர்த்தி
↓
கிருஷ்ணதாஸ்
உஷாநந்தினி
பத்மஜெயன்

கமலேஸ்வரி
+
அருந்தவச்செல்வம்
↓
ஐங்கரன்
அருள்ராஜ்
சுதன்

ரஞ்சிதமலர்
+
ஸ்ரீசுகிர்தராஜா

* அமரர்கள்

# வம்சாவழி

சின்னத்தம்பி + வள்ளிப்பிள்ளை *

- * பாக்கியலச்சுமி + * வேலுப்பிள்ளை
  - சாரதாதேவி + கதிரேசு *
  - இந்திராதேவி + கேராதநாதன்
  - சிவபாலசுந்தரம் + சறோசனா
  - வள்ளிநாயகி + சிவனேசகுகன்
  - கிருபாதேவி + கனகரத்தினம்
  - சந்திரபாலன் *
    - Dr.மனோரஞ்சிதம் + தவத்துரை
      - துஷ்யந்தன்
      - பிரியந்தன்
      - வட்சலா
    - குலசேகரம் *
- கைலாயபிள்ளை * + பரமேஸ்வரி
  - ஸ்ரீஸ்கந்தராசா + ஜெயமலர்
  - ஸ்ரீசுகிர்ராசா + இரஞ்சிதமலர்
  - வரதலெட்சுமி + தயாபரன்
  - பங்கயற்செல்வி + கிருபாகரன் *
  - தெய்வேந்திரராசா + தற்பராதேவி
- பூமணி
  - மனோகரன் + யஜோதினி
    - இளவதனன்
    - கஜவதனன்
- கோபாலகிஷ்ணன் + இரத்தினாம்பிகை
  - ஜெயகௌரி + பரமேஸ்வரன்
- புஸ்பவேணி + சதாசிவம்
  - ஞானகலை + சிவகுமார்
  - சசிகலை + ஜெகதீசன்
  - பரமசிவம்
  - சிவகலை + ஜீவசேகரன்



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

SIVARANJANAM

பாரதி பதிப்பகம் 130, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்